[1967 ஜூலை 18

Serial number and name of residence.	Total value of existing furniture.		Value of additional new furniture now supplied.		Total.	
(1)	(2)		(3)		(4)	
	RS.	P.	RS.	P.	RS.	P.
3 Honourable Minister for Harijan Welfare, No. 96/97-A, Kilpauk Gardens, Madras-10.	871	00	6,676	00	7,547	00

The furniture will be removed and handed over to Government as and when the Minister concerned demits office.

இணைப்பு II.

[12-ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிட்ட வினா எண் 401-க்கான விடையைக் காண்க.]

முன்னாள் முதல் அமைச்சர் அவர்களின் சொந்த வீட்டில் அரசின் செலவில் மராமத்து வேலைகள் ஒன்றும் செய்யப்படவில்லை.

அவர்களின் சொந்த வீட்டில் பின்வரும் வசதிகள் செய்து கொடுக்கப் பட்டன—

	வருடம்	தொகை ரூ.	பை.
1 குளிர் சாதனப் பெட்டி	1964	2,150	00
2 ஊன்று மின் விசிறி	1964	195	00
3 மேஜை மின் விசிறி	1964	122	00
4 நகர்த்தக்கூடிய தடுப்பும் தேக்குமரத் தடுப்பும்.	1964	300	00
5 அலமாரி (சுவரில் பதிக்கப்பட்டது) ..	1965	525	00
6 தட்டிகளைப் பழுதுபார்த்தல்	1965	570	00
7 மேஜை, நாற்காலி, விரிப்பு போன்றவை அளிக்கப்பட்ட விவரம்—			
	1950-ம் ஆண்டிற்கு முன்	1,929	04
	1957–58	462	00
	1963	1,192	00
	1964	580	00
	1965	525	00

முன்னாள் முதல் அமைச்சர் பதவியிலிருந்து விலகியதும் சுவரில் பதிக்கப்பட்ட அலமாரி (இனம் எண் 5) தவிர மற்ற எல்லா மரசாமான்களும் திரும்பப் பெற்றுக்கொள்ளப்பட்டன. அவர் அந்த அலமாரியை வைத்துக்கொள்ள விரும்புவதால் இந்தப் பொருளின் தேய்மான விலைக்கு அவருக்குக் கொடுத்துவிட அரசு இணங்கியுள்ளது.

No maintenance repairs to the residence of the former Chief Minister were done at Government cost.

The following items of amenities were provided in his private residence:—

	Year.	Amount in rupees.	
1 Provision of frigidaire	1964	2,150	00
2 Provision of pedestal fan	1964	195	00

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

1967 ஜூலை 18

	Year.	Amount in rupees.	
3 Provision of Oscillating table fan ..	1964	122	00
4 Provision of moveable screen and a partition in teak-wood.	1964	300	00
5 Provision of one almirah (wall cup-board).	1965	525	00
6 Special repairs to chicks	1965	570	00
7 Provision of table, chair, carpets, etc., before the year—	1950	1,929	04
	1957–58	462	00
	1963	1,192	00
	1964	580	00
	1965	525	00

Except for a wall cup-board (item 5 above) all other items of furniture, etc., supplied have been returned on the former Chief Minister demitting office. In the case of the wall cup-board as he has desired to retain it, Government have agreed to it and to recover the depreciated value of this item from him.

இணைப்பு III.

[22-ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிட்ட வினா எண் 405-க்கான விடையைக் காண்க.]

(அ) மக்கள் பயன்படுத்தும் இன்றியமையாப் பண்டங்கள் சிலவற்றின் விலைகள் பொதுவாக அதிகரித்தன. ஆனால், ரூபாய் மதிப்பு குறைக்கப் பட்டதே விலை அதிகரிப்புக்குக் காரணம் என்று கூறிவிட முடியாது.

(இ) மிளகாய், கடலை எண்ணெய், வெல்லம் ஆகியவற்றின் விலைகள் சிறிது உயர்ந்தன. பதிலின் (அ) பகுதியில் குறிப்பிட்டுள்ளபடி, விலை வாசிகள் உயர்வுக்கு ரூபாய் மதிப்பு குறைக்கப்பட்டதே முழுவதும் காரண மாகாது.

(உ) ரூபாய் மதிப்பு குறைக்கப்பட்டதின் விளைவாக இன்றியமையாப் பண்டங்களின் விலைகள் உயர்வதைத் தடுப்பதற்கென, முந்திய அரசு சில நடவடிக்கைகளை மேற்கொண்டது. கடலை எண்ணெயின் விலையைக் குறைப்பதற்காக தென்னார்க்காடு மாவட்டத்தில் வேர்க்கடலையை அரசாங்கக் கணக்கில் வாங்குவது, ஏனைய இன்றியமையாப் பண்டங்களின் விலைகள் உயராமல் இருப்பதற்காகச் சில நகர்ப்புற இடங்களில் துறையினர் பண்டக சாலைகளைத் துவக்குவது போன்ற நடவடிக்கைகளை முந்திய அமைச்சு மேற்கொண்டது. எனினும், இன்றியமையாப் பண்டங்களின் விலைகள் உயராமல் தடுக்க அந்த நடவடிக்கைகள் போதுமானவைகளாக இல்லை, முந்திய அரசு கடலை எண்ணெய் குறித்து அரசாங்க வாணிகத்தை மேற்கொண்ட சில வாரங்களுக்குப் பிறகு கடலை எண்ணெயின் விலை சிறிது குறைந்தது. ஆனால், சென்னையில் அரசு கடலை எண்ணெய் குறித்து அரசாங்க வாணிபத்தை மேற்கொண்டதால்தான் கடலை எண்ணெய் விலை குறைந்ததாகக் கூறிவிட முடியாது. குஜராத் மாநில அரசு கடலை எண்ணெய் ஏற்றுமதியின் மீது விதித்திருந்த தடையை நீக்கியதையும் அதற்குக் காரணமாகக் கூறலாம். இத்துடன் ஓரளவுக் வேர்க் கடலை தென்னார்க்காடு மாவட்டத்தில் முறைப்படுத்திய சந்தைகளிலிருந்து வாங்கப்பட்டது. ஆனால் இதன் விளைவாக உணவு எண்ணெய் விலைகளில் மாறுதல் ஏற்படவில்லை. முந்திய அரசு பருப்பு வகைகளில் அரசாங்க வாணிபம் மேற்கொண்டதனால், பருப்புகளின வெளிச்சந்தை விலைகள் உயர்வது ஓரளவு தடுக்கப்பட்டது.

(2) இம்மாநிலத்தில் வாழ்க்கைச் செலவுப் புள்ளியை நிர்ணயிப்பதில் உணவுத் தானியங்கள் பெரும்பங்கு வகிக்கின்றன என்பதை யாவரும் அறிவர். இம்மாநிலத்தில் மக்களின் முக்கிய உணவு அரிசியாகும்.